பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 10 2023 7 15
செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. இந்தியா – டோம்னிக் குடிரசுக்கு இடையே வர்த்தகம் மற்றும் இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் பெருகி வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்,
3. செஸ் தீர்வையின் மூலம் கிடைக்கும் வருவாய் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
4. இயற்பியலுக்கான நோபல் பரிசு இந்த ஆண்டு மூன்று விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.
5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் மகளிர் ஐயாயிரம் மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் பருல் சௌத்ரியும், மகளிர் ஈட்டி எறிதலில் அன்னு ராணியும் தங்கப்பதக்கம் வென்றனர்.,

--- இனி விரிவான செய்திகள் --

**[]<<<>>>[]**

இந்தியா வந்துள்ள டோம்னிக் குடியரசின் துணை அதிபர் திரு **Raquel Peña Rodríguez** இன்று புதுதில்லியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து பேசினார்.

அவரை வரவேற்று பேசிய திருமதி திரௌபதி முர்மு, இந்தியா – டோம்னிக் குடியரசுக்கு இடையேயான நட்புறவின் 25-ஆம் ஆண்டு நிறைவை கொண்டாடும் வேளையில், அந்நாட்டின் துணை அதிபர் இந்தியா வந்துள்ளது இருதரப்பு உறவில் முக்கிய மைல் கல்லாக விளங்குவதாகக் குறிப்பிட்டார்.

இரு நாடுகளும் ஜனநாயகத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளன என்றும், உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இந்தியாவும் - டோம்னிக் குடியரசும் இணைந்து செயல்படுவதாக அவர் கூறினார்.

லத்தின் அமெரிக்காவில் உள்ள டோம்னிக் குடியரசு இந்தியாவில் எட்டாவது பெரிய வர்த்தக நட்பு நாடாக விளங்குவதாகவும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக வாய்ப்புகள் பெருகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மருந்து பொருட்கள் உற்பத்தி, கடல்சார் அறிவியல், வானிலை, பேரிடர் மேம்பாடு, கட்டமைப்பு, மின்னணு பணபரிவர்த்தனை தொழில்நுட்பம் ஆகியவற்றில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும் குடியரசுத் தலைவர் கூறினார்.

[]<<<>>>[]

நாட்டின் ஒவ்வொரு மாநிலமும், மாவட்டமும், கிராமும் முன்னேறினால்தான் வளர்ச்சி பெற்ற இந்தியாவை உருவாக்க முடியும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலம் ஜெக்தல்பூரில் 27 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

பூகோள கட்டமைப்பு, மின்னணு கட்டமைப்பு, சமூக கட்டமைப்பு ஆகிய மூன்றும் வளர்ச்சிபெற்றால்தான் நாட்டின் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்ய இயலும் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் கூறினார்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு ஆறு மடங்கு அதிகரிக்கப்பட்டு, தற்போது இது 10 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் எஃகு உற்பத்தியில் தற்சார்பு நிலையை எட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் நாகர்நரில் உள்ள தேசிய கனிம வளர்ச்சி கழகத்தின் மூலம், உற்பத்தி செய்யப்படும் எஃகு வாகன உற்பத்தி மற்றும் ராணுவ தளவாட உற்பத்தி தொழில்களுக்கு புதிய ஆற்றலை அளித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் ராணுவ தளவாட தேவைக்கு மட்டுமின்றி, ஏற்றுமதிக்கும் கிடைக்கும் வகையில் இந்த ஆலை மூலம் அதிக அளவு எஃகு உற்பத்தி செய்யப்படுவதாக பிரதமர் தெரிவித்தார்.

உலகத்தரத்தில் உற்பத்தி செய்யப்படும் எஃகு, பல்வேறு தொழிற்சாலைகளுக்கு பயன்படுவதோடு, ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜெகதல்பூர் ரயில் நிலையத்தில் **Antagarh – Taroki** இடையேயான புதிய ரயில் தடம் மற்றும் **Jagdalpur - Dantewada** இடையே இருவழி ரயில் தடத்தையும் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

தரோக்கி – ராய்பூர் இடையிலான ரயில் சேவையையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.

சத்தீஸ்கர் - ஜார்கண்ட் எல்லைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை 45-தையும் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

பின்னர் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய திரு நரேந்திர மோடி, ஏழை-எளிய மற்றும் பின்தங்கிய மக்களின் நலனுக்காக மத்திய அரசு அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இப்பகுதியின் வளர்ச்சிக்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மக்கள் நலனுக்கான திட்டங்களை அதிக அளவில் செயல்படுத்தி வருவதன் காரணமாக பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்று வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றை சுட்டிக்காட்டினார்.

பிரதமருக்கு 78 சதவீதம் அளவுக்கு செல்வாக்கு உயர்ந்திருப்பதாக அவர் கூறினார்.

ஏழை எளிய மக்கள் மற்றும் பெண்களின் மேம்பாட்டுக்கான வளர்ச்சித் திட்டங்களை மத்திய அரசு அதிக அளவில் கொண்டு வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைவர் பங்களிப்போடும் அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மத்திய அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஒடிஷா மாநிலத்தில் அதிக அளவில் முறைகேடுகள் நடந்திருப்பதாக கூறிய திரு அனுராக் தாக்கூர், இதுகுறித்து புலனாய்வு மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

ஜல் ஜீவன் இயக்கத்தை ஒடிஷா மாநில அரசு விரைந்து செயல்படுத்தி, பெண்களின் முன்னேற்றத்திற்கு துணை புரிய வேண்டும் என்றும் திரு அனுராக் தாக்கூர் கேட்டுக்கொண்டார்.

[]<<<>>>[]

முன்னோடி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முன்னுரிமை அடிப்படையில் அனைத்து உதவிகளையும் செய்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கோவையில், இன்று 3 ஆயிரத்து 479 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக்கடனுதவியை சுமார் 90 ஆயிரம் பேருக்கு வழங்கி பேசிய நிதியமைச்சர், சிறு- குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு வங்கிகள் மூலம் தாராளமாக கடனுதவி வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கு வங்கி கடன் திட்டங்கள், அரசின் மானிய உதவிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியையும் அரசு மேற்கொண்டுவருவதாக திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

செஸ் தீர்வையின் மூலம் கிடைக்கும் வருவாயை மத்திய அரசு கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கி வருவதாகவும், இதனால் நாடு முழுவதிலும் உள்ள எளிய மக்களும் பயன்பெற்று வருவதாக நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

மாநில அரசுகளுடன், மத்திய அரசு பகிர்ந்துகொள்ளும் செஸ் வருவாய் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுவதாக தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டின் எல்லைப்பகுதி தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாக இந்திய விமானப்படை தலைமை தளபதி ஏர்ஷீப் மார்ஷல் வி ஆர் சௌத்திரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய, புலனாய்வு மற்றும் கண்காணிப்புக்கான திட்டங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றப்பட்டு வருவதாகக் கூறினார்.

எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள விமானப்படை தயாராக உள்ளதாகத் தெரிவித்த அவர், 83 இலகு ரக விமானங்கள் உட்பட 97 போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் 156 ஹெலிகாப்டர்களையும் விமானப்படைக்கு கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகும் என்றும் விமானப்படை தலைமை தளபதி கூறினார்.

**[]<<<>>>[]**

பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்பதற்கான பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வன அதிகாரிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வனத்துறை அதிகாரிகள் மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டில் இருந்து விடுபடுவது குறித்த விழிப்புணர்வை பள்ளி மாணவர்கள் மற்றும் சுயஉதவி குழுக்கள் என அனைத்து பிரிவினரையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்று திரு மு க ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

**[]<<<>>>[]**

மேற்குவங்கத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் மத்திய நிதி மோசடி தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மேற்குவங்க மாநில பிஜேபி தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு **Suvendu Adhikari** மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான கிராம பஞ்சாயத்து தலைவர்களும், அரசு அதிகாரிகளும் மோசடியில் ஈடுபட்டுள்ளதாகக் கூறினார்.

கடந்த 12 ஆண்டுகளில் புதிதாக விமான நிலையமோ, துறைமுகமோ எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்று கூறிய அவர், வணிகம் செய்வதற்கான உகந்த சூழ்நிலை மாநிலத்தில் இல்லை என்றும் தெரிவித்தார்.

அம்மாநிலத்தில் இரண்டு கோடி இளைஞர்கள் வேலையின்றி இருப்பதாகவும் திரு சுவேந்து அதிகாரி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

இயற்பியலுக்கான நோபல் பரிசு இந்த ஆண்டு மூன்று விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த **Ferenc Kraus,** ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த **Anne L'Huillier,** அமெரிக்காவின் **Pierre Agostini** ஆகியோர் கூட்டாக இணைந்து மின் உற்பத்தியில் எலெக்ட்ரான்களின் இயக்கம் குறித்த கண்டுபிடிப்புக்கு இந்த நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

தலைநகர் தில்லி உள்ளிட்ட நாட்டின் வட பகுதியில் இன்று இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவுகோலில் நான்கு புள்ளி ஆறாகவும், மற்றும் நேரபாளத்தில் ஆறு புள்ளி இரண்டாகவும் பதிவாகியுள்ளதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது.

நேபாளத்தை மையமாகக் கொண்ட இந்த நிலநடுக்கம், நேபாளத்தில் ஐந்து கிலோமீட்டர் ஆழத்தில் இருந்ததாக அது கூறியுள்ளது.

முதலாவது நிலநடுக்கம் பிற்பகல் மணி 2-25-க்கும், இரண்டாவதாக பிற்பகல் மணி 2-51-க்கும் உணரப்பட்டது.

**[]<<<>>>[]**

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், 3 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

சீனாவின் **Hangzhou**-வில் நடைபெற்று வரும் போட்டியில், மகளிர் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் பருல் சௌத்ரி தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

மகளிருக்கான ஈட்டி எறிதலில் இந்தியாவின் அன்னு ராணி 62 புள்ளி ஒன்பது இரண்டு மீட்டர் ஈட்டி தூரம் ஏறிந்து தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

***End of News***